# சினிமா எக்ஸ்பிரஸ்



## எங்கள் எழுத்தோடும், உணர்வோடும்
## இரண்டறக் கலந்துவிட்ட வாசகர்களுக்கு வணக்கம்.

**தி**ரைப்படங்கள் மூலம் தமிழ் வளர்ந்தது ஒரு காலம். பின்னர் திரைப்படங்களில் தமிழ் பேசப்பட்டதே தவிர, மொழி குறித்த அக்கறை எதுவும் அவற்றில் இருந்ததில்லை. அதுகூடப் பரவாயில்லை. அண்மைக்காலத் தமிழ்ப் படங்களில் வசனங்களிலும், பாடல்களிலும் தமிழைத் தேடவேண்டிய நிலைமைதான் இருக்கிறது.

தமிழில் பெயர் வைத்தால் வரிவிலக்கு என்று கடந்த ஆட்சியில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பால் அப்போது தயாரிப்பில் இருந்த பல படங்களின் பெயர்கள் தமிழில் மாற்றப்பட்டன. பெயர் மட்டும் தமிழில் வைக்கப்பட்ட மோசமான பல படங்கள் வெளிவந்ததுதான் மிச்சம்.

தற்போது வந்துள்ள புதிய அரசு, இத்திட்டத்தை சற்று மாற்றி 'தமிழ்ப் பண்பாடு மீறாத, ஆபாசம், வன்முறை இல்லாத, தணிக்கைக் குழுவினரால் எல்லோரும் பார்க்கலாம் என்பதன் குறியீடாக 'யூ' சான்றிதழ் பெற்ற தமிழ்ப் படங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்கு அரசு வரிவிலக்கு அளிக்கும்' என்று அறிவித்தது. அப்படிப்பட்ட படங்களைத் தேர்ந்தெடுத்து பரிந்துரைக்க ஒரு குழுவையும் அமைத்தது. அக்குழுவின் உறிப்பினர்கள் யார் யார் என்றும் அறிவித்தது.

இப்போது 'நண்பன்', 'வேட்டை' உள்ளிட்ட 'யூ' சான்றிதழ் படங்களுக்கெல்லாம் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட அரசாங்க சலுகையால் சம்பந்தப்பட்ட படத்தின் தயாரிப்பாளர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கேளிக்கை வரித்தொகையைச் செலுத்தத் தேவையில்லை. இப்படிப்பட்ட ஒரு விஷயம், தயாரிப்பாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒன்றுதான். ஆனால், இந்தச் சலுகையால் திரையரங்கத்தின் டிக்கெட்டின் கட்டணத்தில் ஒரு ரூபாய் கூட குறையப்போவதில்லை. இத்திட்டத்தால் படத் தயாரிப்பாளர்களுக்கு லாபமே தவிர, பொதுமக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதுதானே நிஜம்.

டிக்கெட் விலை குறைந்தால்தான் பொதுமக்கள் தியேட்டரை நாடி வருவார்கள். அதனால் படவுலகை பயமுறுத்திக்கொண்டிருக்கும் திருட்டி விசிடி என்ற பேராபத்து நீங்க வாய்ப்பிருக்கிறது.

அதுமட்டுமல்ல, சிறு முதலீட்டில் தயாரிக்கப்பட்டு போதிய பொருளாதார வசதியின்மையால் வெளியிடப்படாமல் தவிக்கும் பல சிறந்த படங்களுக்கு இச்சலுகை அளிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு அது பேருதவியாக இருக்கும். 'கல்வித்துறையில் நன்றாகப் படிக்கும் ஏழை மாணவனின் மேற்படிப்புக்கு உதவித் தொகை வழங்குவதைப்போல'.

பல கோடி ரூபாய் செலவில் நட்சத்திர நடிகர்களை வைத்து வணிக நோக்கில் தயாரிக்கப்படும் படங்கள் 'நண்பன்', 'வேட்டை' போன்றவை. இந்தப் படங்களுக்கு வரிச்சலுகை தர வேண்டிய அவசியம் என்ன? இவர்கள் எடுத்திருப்பது ஒரு 'வீரபாண்டிய கட்டபொம்மனோ', 'கப்பலோட்டிய தமிழனோ' அல்லவே வரிச்சலுகை தந்து ஆதரிக்க?

குறைந்த பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்ட தரமான படங்களுக்கும், நட்சத்திர நடிகர்களே நடித்திருந்தாலும் சமுதாயத்துக்குப் பயனுள்ள கருத்தை வலியுறுத்தும் படங்களுக்கும் வரிச்சலுகை என்றால் நியாயம். 'தணிக்கை வாரியம் 'யூ' சான்றிதழ் தந்துவிட்டது. நாங்கள் சலுகை அறிவித்துவிட்டோம்' என்று ஒரு அரசாங்கம் கூறலாமா?

'தமிழில் பெயர் வைத்தால் போதும் எந்தப் படத்துக்கும் சலுகை' என்று கூறிய கடந்த ஆட்சியின் முடிவு எத்தனை அபத்தமானதோ அதற்கு சற்றும் குறைவில்லாத அபத்தம் இந்த 'யூ' சான்றிதழுக்கெல்லாம் சலுகை என்பதும்!

உங்கள் அன்பன்

ஆசிரியர்.

படம்: 33 காட்சி: 1
1–15 பிப்ரவரி 2012

CINEMA EXPRESS
A New Indian Express Group Publication
Printed & Published by **R.K. JHUNJHUNWALA** on behalf of Express Publication (Madurai) Ltd., at Express Garden,
29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600058.
ஆசிரியர்: சதீஷ் – **Editor: Sathish**
Phone: 044 - 2345 7601, Fax: 044 - 2345 7619
Website: http://www.cinemaexpress.com, E-mail ID : cinemaexpress@cinemaexpress.com